# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 24.01.2023 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத்தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

## கூட்டப்பொருள்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 33552/2022/EA2-SWM-2 நாள் 10.01.2023ன் படி மேட்டுப்பாளையம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளான வீடு வீடாக குப்பை வாங்குதல், வணிக நிறுவனங்களில் குப்பைகள் சேகரித்தல் போன்ற பணிகளை தனியார் சேவை வழங்குபவர்/ முகமை/ ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள உரிய வழிகாட்டுதலுடன் கீழ்கண்டவாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| நகராட்சி பெயர் | மொத்த கழிவுகளின் அளவு (TPD) | ஓர் டன்னின் மதிப்பு | ஓர் நாளின் அடிப்படை மதிப்பின் மதிப்பீடு ((லட்சம்) | ஓர் ஆண்டின் அடிப்படை மதிப்பீடு (லட்சம்) | சரக்கு மற்றும் சேவை வரி 18% மற்றும் தொழிலாளர் நல நிதி 1% (லட்சம்) | ஓர் ஆண்டின் மொத்த மதிப்பீடு தொகை (லட்சம்) |
|---|---|---|---|---|---|---|
| மேட்டுப் பாளையம் | 21.66 | 4796 | 1.04 | 379.60 | 72.12 | 451.72 |

நகராட்சியின் வாகனங்களை வாடகை அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரரிடம் வழங்கிடவும் நாளொன்றுக்கான வாடகை நிர்ணயம் செய்தும், அதனை மாதாந்திர பட்டியலில் பிடித்தம் செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வகை | மொத்த வாகனங்களின் எண்ணிக்கை | நகராட்சி உபயோகம் போக ஒப்பந்ததாரருக்கு வாடகைக்கு வழங்க உள்ள வாகனங்களின் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு நிர்ணயக்கப்பட்ட வாடகை | ஓர் நாளுக்கு வசூல் வேண்டிய வாடகை தொகை |
|---|---|---|---|---|
| தள்ளுவண்டி(Pushcart) | 15 | 15 | 10 | 150 |
| பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (BOV) | 5 | 5 | 100 | 500 |
| இலகுரக வாகனம்(LCV) | 6 | 3 | 200 | 600 |
| கனரக வாகனம்(HCV) | 3 | 2 | 400 | 800 |
| Total | 29 | 25 | | 2050 |

தற்போது நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் பணிகளின் விபரம் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| நடவடிக்கை | ஈடுபடுத்த வேண்டிய நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | வகை | இலகுரக வாகனம் | பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் |
|---|---|---|---|---|
| பூங்கா சுத்தம் செய்தல் | 1 | | | |
| பேருந்து நிலையம் | 9 | LCV | 1 | |
| மார்கெட் | 23 | HCV | | 1 |
| புல்செடிகள் அகற்றுதல் | 6 | | | |
| சாலை சுத்தம் செய்தல் | 2 | LCV | 1 | |
| கால்வாய் சுத்தம் | 12 | | | |
| பொது மற்றும் சமுதாக | 6 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் | | | | |
| தெருக்கள் மற்றும் சாலை சுத்தம் செய்தல் | 20 | LCV | 1 | |
| Total | 79 | | 3 | 1 |

தனியார், ஒப்பந்ததாரர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பணியின் விபரம்** | **வீடுகள் / கடைகளின் எண்ணிக்கை விபரம்** |
|---|---|---|
| 1 | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து தள்ளுவண்டியில் சேகரிக்கும் பணி. | 1456 வீடுகள் |
| 2 | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து பேட்டரி மூலம் இயங்கும் வாகனம்(BOV) வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி. | 11024 வீடுகள் |
| 3 | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து இலகுரக வாகனம் (LCV) வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி. | 8320 வீடுகள் |
| 4 | சிறு வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து இலகுரக வாகனம் (LCV) வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி. | 1472 சிறு வணிக நிறுவனம் |
| 5 | பெறு வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து கனரக வாகனம் (HCV) வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி. | 981 பெரும் வணிக நிறுவனம் |

மேற்கண்டவாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறைகள் வழிகாட்டுதல்களின்படியும், திறந்தவெளி ஒப்பந்தபுள்ளி நடைமுறைகளின்படியும் தனியார் சேவை வழங்குபவர்/ முகமை/ ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்க்கொள்ளவும், இப்பணிகளுக்கு மூன்று வருடங்களுக்கு ஆகும் செலவினங்களையும் மற்றும் தனியார் நிறுவன சேவை கட்டணம் போன்ற இது தொடர்பான இதர செலவினங்களுக்கும் நகராட்சி பொதுநிதியில் மேற்க்கொள்ளவும், பொதுநிதியில் ஏதேனும் பற்றாக்குறை ஏற்படின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு 15 வது மத்திய நிதிக் குழு ஒதுக்கப்படும் வரையறுக்கப்பட்ட மான்யத்தியில் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.
2. தனியார் முகமை வாயிலாக மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகளுடன்கழிவு நீர் சாக்கடை தூய்மை செய்யும் பணியினையும் மேற்கொள்ளப்பட நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட வேண்டும் எனும் நிபந்தனையுடன் மன்றம் அனுமதி வழங்கலாம்.
   ந.க.எண் 4481/2022/எச்1

தீர்மானம் எண் : **534**

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது